




# EXPRESS VELACHERY

Neighbourhood Newspaper - Weekly

*Free Circulation*







VOL - 4 ISSUE - 48 Editorial : 044-42077328 / 7305837388

## SG PEOPLE TRUST INDEPENDENCE DAY CONTEST...

We SG People Trust, Velachery conducting Competition on Independence Day at our office premises (Velachery) - 15-08-2023

Time : 4 to 6PM


Competition

1.Drawing
2. Speech
3. Essay Writing

Age category 07 to 15years..

Those who are interested in joiningPlease register through : 7871170736& 9003298927.

## ஓ.எம்.ஆர்.சாலையில் 4 மேம்பாலங்கள் கட்டுவதற்கு 331 கோடி ரூபாய் ஒதுக்கீடு- 2 ஆண்டுகளில் முடிக்க திட்டம்...



சென்னையில் போக்கு வரத்து நெரிசலை குறைக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தேவையான இடங்களில் மேம்பாலங்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த வகையில் சென்னை ராஜீவ் காந்தி சாலையில் (ஓ.எம்.ஆர். சாலை) 4 மேம்பாலங்கள் கட்டுவதற்கு மாநில அரசு ரூ.331 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. அதற்கான முதல் தவணையாக ரூ.50 கோடியை வழங்கியுள்ளது. தரமணி- எஸ்.ஆர்.பி. டூல்ஸ் சந்திப்பு, எம்.ஜி.ஆர். சாலை-பெருங்குடி, துரைப்பாக்கம் ரேடியல் ரோடு சந்திப்பு, சோழிங்கநல்லூர் சந்திப்பு ஆகிய 4 இடங்களில் மேம்பாலங்கள் அமைகின்றன. சென்னை மெட்ரோ ரெயில் லிமிடெட் மற்றும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் இணைந்து இப்பணியை மேற்கொள்கின்றன. 2 ஆண்டுகளில் பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டு உள்ளது.இந்த மேம்பாலங்களுக்கா-ன செலவு ரூ.459.32 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு அரசின் சாலை மேம்பாட்டு நிறுவனம் ரூ.331 கோடியும், மீதமுள்ள தொகையை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனமும் வழங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## சென்னை கோட்டை அருகே சுதந்திர தின விழா அணிவகுப்பு ஒத்திகை...



சுதந்திர தினவிழா வருகிற 15-ந்தேதி (செவ்வாய்க்கிழமை) சென்னை கோட்டையில் நடைபெறுவதை முன்னிட்டு நாளை(வெள்ளிக்கிழமை), 10 மற்றும் 13 ஆகிய 3 நாட்களில் சுதந்திர தின விழாவின் ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற உள்ளது. இந்த நாட்களில் காலை 6 மணி முதல் கீழ்க்கண்ட இடங்களில் போக்குவரத்து மாற்றம் அமலில் இருக்கும்.

நேப்பியர் பாலம் முதல் போர் நினைவுச்சின்னம் வரை அமையப் பெற்றுள்ள காமராஜர் சாலை, போர் நினைவுச்சின்னத்தில் இருந்து ரிசர்வ் வங்கி சுரங்கப்பாதை வடக்கு பகுதிவரை அமையப் பெற்றுள்ள ராஜாஜி சாலை மற்றும் கொடிமரச்சாலை ஆகிய சாலைகளில் அனைத்து வாகனங்களின் போக்குவரத்து தடை செய்யப்படும்.

பாரிமுனையை நோக்கி செல்லும் அனைத்து வாகனங்களும் சுவாமி சிவானந்தா சாலை, அண்ணாசாலை, முத்துசாமி பாலம், முத்துசாமி சாலை, ராஜா அண்ணாமலை மன்றம் மற்றும் வடக்கு கோட்டை பக்க சாலை வழியாக பாரிமுனையை வந்து அடையலாம். சாலை வழியாக

பாரிமுனையில் இருந்து ராஜாஜி சாலை வழியாக காமராஜர் சாலை நோக்கி செல்லும் அனைத்து வாகனங்களும் வடக்கு கோட்டை பக்க சாலை, ராஜா அண்ணாமலை மன்றம் சந்திப்பு, முத்துசாமி சாலை, ஈ.வெ.ரா. சாலை, பல்லவன் சாலை, அண்ணா சாலை, வாலாஜா சாலை வழியாக காமராஜர் சாலையை சென்றடையலாம்.

அண்ணா சாலையில் இருந்து கொடிமரச்சாலை வழியாக பாரிமுனை செல்லும் வாகனங்கள் வாலாஜா சிக்னல் சந்திப்பு, முத்துசாமி பாலம், ராஜா அண்ணாமலை மன்றம், வடக்கு கோட்டை பக்க சாலை வழியாக பாரிமுனையை சென்றடையலாம்.

## ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி- இந்தியா-மலேசியா மோதல்...



7-வது ஆசிய சாம்பி யன்ஸ் டிராபி ஹாக்கி போட்டி சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதா கிருஷ்ணன் ஸ்டேடியத்தில் நடைபெற்று வருகிறது. இதில் நடப்பு சாம்பியன் தென் கொரியா, முன்னாள் சாம்பியன்கள் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் மலேசியா, ஜப்பான்,சீனா ஆகிய 6 நாடுகள் பங்கேற்றுள்ளன. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் ரவுண்டுக்கு ராபின் முறையில் ஒரு தடவை மோதும். "லீக்" முடிவில் புள்ளிகள் அடிப்படையில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரை இறுதிக்கு தகுதி பெறும். 2-வது நாளான நேற்று நடந்த ஆட்டம் ஒன்றில் இந்திய அணி ஜப்பானை எதிர் கொண்டது. இந்த ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் "டிரா" ஆனது. இதே போல் பாகிஸ் தான்-தென்கொரியா அணிகள் மோதிய ஆட்டமும் 1-1 என்ற கோல் கணக்கில் "டிரா" ஆனது. இன்னொரு ஆட்டத்தில் மலேசியா 5-1 என்ற கோல் கணக்கில் சீனாவை வீழ்த்தியது. 6.8.2023 இரவு 8.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா-மலேசியா அணிகள் மோதுகின்றன. ஹர்மன்பிரீத் சிங் தலைமையிலான இந்திய அணி 1 வெற்றி, 1 டிராவுடன் 4 புள்ளிகள் பெற்று 2-வது இடத்தில் உள்ளது. பலவீன மான ஜப்பான் அணியை நேற்று வீழ்த்த முடியாமல் போனது ஏமாற்றமே. மலேசியா வலுவாக இருப்பதால் அந்த அணியை வீழ்த்துவது இந்தியாவுக்கு கடும் சவாலாக இருக்கும். மலேசிய அணி தான் மோதிய 2 ஆட்டத்திலும் வெற்றி பெற்று இருந்தது. தொடக்க ஆட்டத்தில் பாகிஸ்தானை 3-1 என்ற கோல் கணக்கில் அதிர்ச்சி கரமாக வீழ்த்தி இருந்தது. இதேபோல் இந்தியாவுக்கும் அதிர்ச்சி கொடுத்து ஹாட்ரிக் வெற்றியை பெறும் ஆர்வத்தில் மலேசியா உள்ளது.

# CLASSIFIED

## VELACHERY
**Laxmipuram before Dandeeswaram Colony**

INDP HOUSE 3BHK, 1 Ground, 1600 Built, CCP, 3P Power, Metro, Bore Water, Safe Area during Flooding, Cyclone, EAST Facing, Rs.3.3Cr

**89399 43999**

---

**TMS YOGA AND ART'S CENTER**

SIMPLE SOLUTION TO LEARN
ONLINE & OFFLINE

Contact
9789098094
8012041624
9500090445

Velachery, Madippakkam, Keelkatalai.

---

## RESALE
**VELACHERY SRINIVASA NAGAR**
**Near ISHA Homes, 10mts to MRTS**

2BHK - 710 Sqft / UDS - 355 Sqft / GF / EAST Facing / Rs. 46Lacs

**90030 93204**

---

To Advertise about Your Business Rental House, Buying, Selling, Services & Job Vacancy Pay Rs. 100/- Only

---

**Mother Land**

*Play School, Day Care & After School Care*

*No.38, 2nd Street, Tansi Nagar, Vijayanagar, (Near ICICI Bank - Royal Shoppee) Velachery, Chennai - 600 042.*

Contact
72992 62185
90947 52300

---

## WANTED
*Tele Callers*

CONTACT
7305837388

---

**Commercial Space for Rent**

600 Square feet for 15,000/-@ ground floor

*31/14, Sarathy Nagar, 2nd street, Velachery ( Bethel Hr Sec School Opp )*

3 month rent as advance

CONTACT
8015427018

---

## WANTED
Front Desk Executive
*(Male / Female)*

Ateliers Fitness Velachery, Behind A2b

Contact
**9841030772**

---

**WOMAN'S WELLNESS YOGA CENTRE**
**Contact : 9444 122 922**

**TREATMENTS FOR**

- Headache / Migraine
  தலைவலி / ஒற்றை தலைவலி
- Sinusitis
  சைனஸ் தொந்தரவு
- Neck Pain / Cervical Spondylosis
  கழுத்து வலி
- Back Pain / Lumber Spondylosis
  முதுகு வலி
- Digestion Problems & GIT disorders
  வயிறு ரூ குடல் சம்பந்தமான தொந்தரவுகள்
- Uterine ailment like Fibroid
  கர்ப்பப்பை கோளாறுகள்
- PCOD
  மாதவிடாய் கோளாறுகள்
- Respiratory ailments, Asthama
  சுவாச கோளாறுகள்
- Diabetes & is Complications
  சர்க்கரை வியாதிகள்
- Cholastrol, BP
  கொலஸ்ட்ரால்இ ரத்த கொதிப்பு
- Thyroid Problems
  தைராய்டு பிரச்சனை
- Stress, Anxiety & Sleep Disturbance
  மன அழுத்தம் ரூ தூக்கமின்மை
- Weight Loss & Weight gain
  உடல் எடையை குறைக்க ரூ அதிகரிக்க
- General Health
  பொது மருத்துவம்
- Infertility
  குழந்தையின்மை

---

CONSULTANT CATERING HOSPITALITY SERVICE

**NFC**
NIMS FOOD CONSULTANT

E. KAMESH KUMAR IHM-MBA

Office:plot No:4,kumaran nagar, keelkattalai, chennai-600117

Adviser:K.VIJAYA KANCHANA MSC Food & Nutrition.

email:Nutritionnfc@gmc

Mobile:9790 902400
email:Consultantnfc@gmail.com

---

**சென்னையில் பெட்ரோல், டீசல் விலை நிலவரம்** Friday Price



| பெட்ரோல் விலை | டீசல் விலை |
|---|---|
| விலை 1 லிட்டர் 102.63 | விலை 1 லிட்டர் ₹ 94.24 |

---

**NISHA YOGA & MEDITATION CENTRE VELACHERY**

Online Class for Women and Kids

*FOR ALL AGE CATEGORIES*

CONTACT
89391 53560

---

## DESIGNING
Tamil & English DTP designing works Rs. 500/- only

Contact
7358182075

---

## WANTED
**LADIES TAILOR**

**PRASUDRA Boutique**

No:2 LAKSHMI NAGAR, 2nd STREET, VELACHERY

*CONTACT - PREMALATHA*
4435504719
8870393999

---

**சென்னையில் தங்கம் மற்றும் வெள்ளி விலை நிலவரம்**

| | | | | |
|---|---|---|---|---|
| தங்கம் விலை - | 22 கேரட் | | 24 கேரட் | |
| | 1 கிராம் | 5555 | 1 கிராம் | 6025 |
| | 8 கிராம் | 44440 | 8 கிராம் | 48200 |
| வெள்ளி விலை - | 1 கிராம் | 78.50 | | |
| | 1 கிலோ | 78500 | | |

Friday Price

---

**TUITION CENTRE @ Velachery**

**Baby Nagar**

*For Students Till 9th Grade of Any Syllabus*

*Contact*
909 494 7285

---

**Butter Flies**
Beauty Parlour & Beauty Training Institute
Recognised by Tamilnadu Governmen

Ladies & Kids Only
Consultant: Beauty tip & women empowerment (adviser)

No:1, MG NAGAR, ATHANUR - 603 202
binduinno@gmail.com

80560 87391
81247 02731

---

SHARAN TRAVELS

All kinds of Tourist vehicle available here Drivers Available

Contact V. Marimuthu
9840508030

---

## RENTAL
LAND BUYING, SELLING

All Kind of Building Repair Works Undertaken

Contact B. Rajendran
90809 94500

---

## SERVICES
Plumbing works

Contact
Govindaswamy
87544 09752

ஆன்மீக தகவல்

# ஆடி மாத ஞாயிற்றுக் கிழமைகளில் இதை மட்டும் நீங்கள் தவறாமல் செய்து விட்டால் இது வரை வராத குலதெய்வம் கூட வீடு தேடி வந்து உங்களை வாழ வைக்கும்.

ஆடி மாதத்தின் விசேஷங்களை பற்றி யாருக்கும் சொல்லி தெரிய தேவையில்லை. பொதுவாகவே ஆடி மாதம் என்பது வழிபாட்டிற்குரிய மாதமாக கருதப்படுகிறது. அதிலும் அம்மன் வழிபாடு மிகவும் சிறப்பு வாய்ந்ததாக சொல்லப்படுகிறது. இந்த மாதத்தில் செய்யப்படும் குலதெய்வ வழிபாடும் மிகவும் சிறப்பு வாய்ந்ததாக சொல்லப்படுகிறது. அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாதத்தில் நம் வீட்டு குலதெய்வத்தை வீட்டிற்குள் அழைக்க என்ன செய்ய வேண்டும் என்பதை பற்றி தான் இந்த பதிவில் தெரிந்து கொள்ளப் போகிறோம்.

குலதெய்வம் வீட்டிற்குள் வர என்ன செய்ய வேண்டும்

இந்த குலதெய்வ வழிபாடு ஆனது ஒவ்வொரு வீட்டிலும் கட்டாயம் செய்ய வேண்டும். ஏனெனில் குலதெய்வம் என்றாலே நம் குலத்தை காக்கும் தெய்வம் என்று தான் பொருள். இந்த தெய்வத்தின் அருளை நாம் பெறுவது மிகவும் முக்கியம். அப்படியான குலதெய்வம் பலருக்கும் தெரியாமல் இருக்கலாம். அதை நேரத்தில் குலதெய்வத்தின் அருள் கிடைக்காமலும் இருக்கலாம். இதை எல்லாம் கூட இந்த எளிய பரிகாரத்தின் மூலம் சரி செய்து கொள்ளலாம்.

இதற்கு ஆடி மாதத்தின் ஞாயிற்றுக்கிழமை மிக சிறந்த நாள். இதில் இந்த பரிகாரத்தை முடியாதவர்கள் ஆடி மாதத்தில் வரும் செவ்வாய், வெள்ளி போன்ற நாட்களை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். ஞாயிற்றுக்கிழமை காலையில் எழுந்து வீட்டு வாசலில் தண்ணீர் தெளித்து கோலம் போட்ட பிறகு கோலத்தின் மேல் கொஞ்சம் மஞ்சள் குங்குமம் பொட்டு வைக்க வேண்டும். இது அம்மனை வீட்டிற்குள் அழைப்பது போல ஆகும்.

அதே போல் நிலைவாசல் துடைத்து மஞ்சள் குங்குமம் பொட்டு வைத்த பிறகு அதன் அருகே ஒரு தாம்பாள தட்டில் கொஞ்சம் வேப்பிலையை பரப்பி வைத்து அதன் மேல் அகல் விளக்கை வைத்து தீபம் ஒரு ஏற்றுக் கொள்ளுங்கள். இந்த தீபத்தை ஏற்றும் பொழுது உங்கள் குலதெய்வம் இஷ்ட தெய்வம் போன்றவற்றை மனதார நினைத்துக் கொண்டு நீங்கள் எங்கள் வீட்டிற்குள் வந்து எங்களை நல்ல முறையில் வாழ வைக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுங்கள்.

இங்கு தீபம் ஏற்றிய பிறகு நேராக பூஜை அறை சென்று அங்கு காமாட்சி அம்மன் தீபம் ஏற்றி விட்டு சிறிது நேரம் அங்கேயே அமர்ந்து குலதெய்வத்தை நினைத்து மனதார பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள். இப்படி செய்வதன் மூலம் நிச்சயம் குலதெய்வம் நம் வீட்டிற்குள் வரும் என்று சொல்லப்படுகிறது. அதுமட்டுமின்றி இந்த மாதத்தில் கட்டாயம் வீட்டு வாசலில் வேப்பிலை சொருகி வைக்க வேண்டும் அதே போல் வாசலில் எலுமிச்சை பழத்தையும் வைக்க வேண்டும்.

இந்த வேப்பிலையை எலுமிச்சை பழம் இரண்டில் வாசத்திற்கு நிச்சயம் நம்முடைய இஷ்ட தெய்வம் குலதெய்வம் அனைத்தும் நம்மை தேடி வரும் என்றும் சொல்லப்படுகிறது. இந்த வேப்பிலையும் எலுமிச்சை பழமும் வாட கூடாது. இது கொஞ்சம் வாடும் போதே வேறு புதிதாக மாற்றி வைத்து விடுங்கள்.

அது மட்டும் இன்றி நம் வீட்டு பூஜை அறையிலோ அல்லது வாசலிலோ பித்தளை சோம்பில் தண்ணீர் எடுத்து அந்த தண்ணீரில் மஞ்சள் கலந்து கொள்ளுங்கள். அத்துடன் கொஞ்சம் வேப்பிலை ஒரு எலுமிச்சை பழத்தை போட்டு வைத்து விடுங்கள்.

இப்படி செய்வதன் மூலமும் குலதெய்வம் நம்மை தேடி வரும் என்று சொல்லப்படுகிறது. குலதெய்வம் வீட்டிற்குள் வந்து விட்டால் அந்த வீட்டில் இருக்கும் துன்பங்கள் அனைத்தும் தூரப் போய் வீடு லட்சுமி கடாச்சம் நிறைந்து இருக்கும்.

இந்த பரிகாரத்தை இந்த ஆடி மாதத்தில் செய்து அனைவரும் குலதெய்வத்தின் அருளாசியை பெறலாம் என்ற ஒரு தகவலோடு பதிவினை நிறைவு செய்து கொள்வோம்.

# வீட்டு காய்கறி தோட்டம் பின்பற்றவேண்டிய வழிமுறைகள்

காய்கறிகள் நம் அன்றாட வாழ்விற்கு மிகவும் முக்கியமானதாகும். அதுவும் குறிப்பாக சைவ உணவு உண்பவர்களுக்கு மிகவும் அவசியம். இவை உணவின் ஊட்டச்சத்தை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல் உணவின் சுவையை கூட்டுகிறது. ஊட்டச்சத்து வல்லுனர்களின் பரிந்துரைப்படி ஒரு வயதுவந்த நபர் சீரான திட்ட உணவிற்கு ஒருநாளைக்கு 85 கிராம் பழங்களையும் 300 கிராம் காய்கறிகளையும் உண்ணவேண்டும்.

ஆனால் தற்போதைய காய்கறி உற்பத்தியை கணக்கிட்டு பார்க்கும்பொழுது ஒரு நபர் ஒரு நாளைக்கு 120 கிராம் காய்கறிகளையே பெற முடிகிறது. மேற்கண்ட கருத்துக்களை மனதில் கொண்டு நாம் நமது அன்றாட வாழ்விற்கு தேவையான வீட்டுக் காய்கறி தோட்டத்தில் நம்மிடமுள்ள சுத்தமான தண்ணீர், சமையலறை அல்லது குளியலறை கழிவுநீரை பயன்படுத்தி உற்பத்தி செய்யலாம். இதன்மூலம் உபயோகமில்லாத தண்ணீர் தேங்கி நிற்பதையும், அதனால் ஏற்படும் சுகாதார கேட்டையும் சுற்றுசூழல் மாசுபாட்டையும் தடுக்கலாம். இதனால் பயனுள்ள வகையில் காய்கறி உற்பத்தியை மேற்கொள்ள முடிகிறது.

மிக குறைவான இடத்தில சாகுபடி செய்யப்படுவதால் மிக எளிதான முறையில் நோய் மற்றும் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தலாம். மேலும் பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்தவேண்டிய அவசியம் இல்லை. நோய் மற்றும் பூச்சி தாக்கிய பகுதிகளை அகற்றினால் போதுமானதாகும். இதனால் காய்கறிகளில் நச்சு ரசாயனங்கள் படிவத்தை தவிர்க்க முடிகிறது.

குளியலறை கழிவுநீர் வெளியேறும் இடத்தில் கல்வாழை மற்றும் சேப்பங்கிழங்கு செடிகளை வைத்தால் சோப்பு தண்ணீரை இந்த செடிகள் சுத்தமாகிவிடும் இவ்வாறு கழிவு நீர்களை நாம் இயற்கை முறையில் மறுசுழற்சி செய்வதினால் கழிவுநீர் என்பதே தேங்காது, இதனால் கொசுக்கள் உற்பத்தி குறையும் மற்றும் வீட்டில் எப்பொழுதும் குளிர்ச்சி இருந்து கொண்டே இருக்கும்.

இதனால் கிராமங்களில் இருப்பவர்கள் வீட்டுத்தோட்டங்களையும் நகரங்களில் வாழ்பவர்கள் மாடித்தோட்டங்களில் காய்கறிகளை உற்பத்தி செய்யலாம்.

வீட்டுதோட்டம் அமைக்கும் முறை:

வீட்டில் இருக்கும் இடவசதிக்கு ஏற்றவாறு நாம் காய்கறிகளை பயிரிடலாம். இடத்தை மண்வெட்டியினால் நன்கு உழுது சமன்படுத்தி பாத்திகளை ஏற்படுத்த வேண்டும். மாட்டு சாணம் அல்லது ஆட்டு சாணத்தை தொழுவுரமாக பயன்படுத்தும்பொழுது நமக்கு நல்ல விளைச்சல் கிடைக்கும்.வீட்டு தோட்டத்தில் குறைவான இடத்தில் தக்காளி , கத்தரிக்காய், மிளகாய் செடிகளை வளர்க்கலாம். இடவசதி இருக்கும் பட்சத்தில் இரண்டு பாத்திகளில் கீரை, புதினா, கொத்தமல்லி மற்றும் அவரைக்காய் பூசணி போன்ற கொடிவகை காய்கறிகளையும் வளர்க்கலாம்.

கோடிவகை காய்கறிகளுக்கு கொடிகள் நன்கு பரவுமாறு பந்தல் அமைத்தல் முக்கியமானதாகும் அல்லது வீட்டின் மேற்கூரை மேல் பரவவிட்டும் வளர்க்கலாம்.

தயவு செய்து உங்களுடைய கருத்துக்களை கீழே உள்ள கமெண்ட் ஏரியாவில் பதிவிடவும். தவறுகளை சுட்டிக்காட்டி, உங்கள் கருத்துக்களை பரிமாறி இவ்வலைத்தளத்தை திறன்பட நடத்த உதவவும்.


# தவளையும் எருதும்

*குழந்தைகள் கதை*

ஒரு காட்டுக்கு பக்கத்துல இருக்குற குட்டைல நிறைய தவளைகள் வாழ்ந்துகிட்டு வந்துச்சுங்க ,அந்த குட்டை பக்கம் எந்த மிருகங்களும் அவ்வளவா வராது,அதனால மத்த மிருகங்கள் இருக்கிறதே அந்த தவளைகளுக்கு தெரியாது



அந்த தவளைகள்ல ஒரு தவளை மட்டும் ரொம்ப பெருசா இருந்துச்சு ,அந்த தவளை எப்பவும் தன்ன ரொம்ப பலசாலின்னு காமிச்சிக்க விரும்பும் ,பக்கத்துல எதாவது தட்டான் பூச்சி வந்தா கூட தன்னோட வாய பலூன் மாதிரி ஊதி டப்புனு சத்தம் கொடுத்து பூச்சிகளை விரட்டும்




ஒருநாள் அந்த குட்டை பக்கம் ஒரு எருது வந்துச்சு ,



உடனே அங்க இருந்த தட்டான் பூச்சிகள் எல்லாம் அந்த தவளைகிட்ட வந்து சொல்லுச்சுங்க இங்க பாத்தியா உன்ன விட மிகப்பெரிய மிருகம் ஒன்னு வந்திருக்கு ,உன்னோட பலத்த அந்த எருதுகிட்ட காமி போனு சொல்லுச்சுங்க






உடனே கோபமான தவளை அந்த எருதுக்கு முன்னாடி பொய் நின்னுச்சு ,அந்த எருதுக்கு இந்த சின்ன தவளை ஒரு பொருட்டாவே இல்ல

அது அதுபாட்டுக்கு பக்கத்துல இருக்குற புல்ல மேஞ்சுக்கிட்டு இருந்துச்சு ,இத பாத்த தவளை எப்பயும்போல வாய பலூன் மாதிரி ஊதி சத்தம் கொடுத்துச்சு ,அந்த சத்தமும் எருத ஒன்னும் செய்யலைனு தெரிஞ்சதும்

வாய நல்லா குவிச்சு ஊத்திக்கிட்டே இருந்துச்சு ஒரு கட்டத்துல அதோட வலிமை அடங்கி டப்புனு தவளையோட உடம்பு வெடிச்சி போச்சு ,தான்கிற அகங்காரத்தோட இருந்த தவளை அப்படியே செத்துப்போச்சு








## BOOK REVIEW OF THE WEEK

Hey guys, today we're reviewing Harry Potter and the Order of the Phoenix. Spoilers for the review but this book is genuinely dreadful. Being the fifth in the franchise, it's right after possibly the darkest book in the series, the Goblet of Fire. So, the book starts off with Harry and Dudley having a fight and Dudley getting attacked by a Dementor. This leads to something, I guess. Genuinely I don't remember anything about this book at all other than that it's 899 pages long. I remember that Harry gets taken to Grimmauld Place, has a trial and goes to Hogwarts and that the book ends in the Department of Mysteries. That's all I remember about the plot of the book. Repeatedly while reading the book, I asked myself: How the hell am I not interested at all in a Harry Potter book? Reading this book felt like an absolute chore. How the hell did J.K go from nearly her magnum opus to something that felt like it was written by an AI? This whole book is just Harry going through teenage angst and everyone around him getting flanderised. This is going to be more of a rant than a review. First, Harry is so fed up with being special in this one. Seamus in this book is nonexistent. And when he is present, he just insults Harry and makes Your Mom jokes most of the time. Hermione just becomes an annoying and sensitive twit. Ron though, oh Ron, the worst character in this book. Ron went from a chill guy to an idiot in this book. Dumbledore is absent for most of the book as he gets arrested. But Harry's little comebacks at Umbridge were the funniest part. Luna was also a character in this book. That's all I have to say about because she's boring. This book also suffers from serious pacing issues. The middle part of the book is just pointless. 500 of the 899 pages could have been cut. The book has about 40 chapters so half of the chapters could have been cut. In the first book, Harry reaches Hogwarts in chapter 3 but in this book, it takes 10 chapters for even a single line of dialogue about Hogwarts. This has become the second big screw up of Harry Potter besides, you know, J.K Rowling's twitter account.



Yeddanapudi Jeyan
Class 5
Delhi Public School,
Nacharam,
Telangana.

## பொன்மொழி




[1085] **திருக்குறள்**



கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கமிம் மூன்றும் உடைத்து.
Is it death, eye or doe? All three
In winsome woman's look I see.

## ALTERNATIVES

***Very old - out-dated***
***Very realistic - practical***
***Very fond - attached***
***Very fancy - lavish***
***Very bad - abominable***



Dr.Mrs. Y. Deepika,
M.Sc.,Ph.D.,
Delhi Public School,
Nacharam,Telangana,

**KINDLY SHARE YOUR VALUABLE FEEDBACK**









# இந்த வார ராசிபலன்



**மேஷம்**

இந்த வாரம் உங்கள் தாராளமான நடத்தையை குடும்ப உறுப்பினர்கள் தேவையற்ற சாதகமாகப் பயன்படுத்துவதை உணர்வீர்கள்.



**துலாம்**

இந்த வாரம், உங்கள் குடும்ப வாழ்க்கையில் நிலவும் அனைத்து முரண்பாடுகளையும் நீக்கி, மோசமான குடும்பத்தின் நிதி நிலைமையை மேம்படுத்த முடியும்.



**ரிஷபம்**

இந்த வாரம், நீங்கள் செய்ய விரும்பாத வேலையில் மற்றவர்களை கட்டாயப்படுத்தாதீர்கள். ஏனெனில் இந்த நேரத்தில் உங்கள் இயல்பில் சில சுயநலம் அதிகரிக்கும்.



**விருச்சிகம்**

இந்த வாரம், உங்களுக்கு மிகவும் தேவைப்படும் நேரத்தில் ஒரு நண்பர் அல்லது நெருங்கிய நண்பர் உங்களைக் காட்டிக் கொடுக்கலாம்.



**மிதுனம்**

இந்த வாரம், விரைவாகப் பணம் சம்பாதிப்பதற்காக எந்த வகையான குறுக்குவழியையும் நீங்கள் பின்பற்றலாம், நீங்கள் சட்டவிரோ-தமான சிக்கலில் சிக்குவீர்கள்.



**தனுசு**

நீங்கள் எப்போதாவது மட்டுமே சந்திக்கும் நபர்களை இந்த வாரம் பேசவும் தொடர்பு கொள்ளவும் உங்கள் உறவினர்கள் அல்லது நண்பர்கள் உங்களுக்கு உதவுவார்கள்.



**கடகம்**

இந்த வாரம் குடும்ப வாழ்க்கையில் தொடர்ந்து வரும் பதட்டங்கள் காரணமாக உங்கள் கவனத்தை சீர்குலைக்க வேண்டாம்.



**மகரம்**

இந்த வாரம், சரியாக திட்டமிடாமல், உங்கள் துணையுடன் வீட்டிற்குத் தேவையான பல விலையு-யர்ந்த பொருட்களை ஷாப்பிங் செய்து பணத்தைச் செலவிடலாம்.



**சிம்மம்**

இந்த வாரம், மாணவர்களின் வாழ்க்கை வரைபடம் உயரத்தை எட்டும், ஆனால் நீங்கள் பெறும் வெற்றி உங்கள் ஈகோவின் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருக்கும்.



**கும்பம்**

இந்த வாரம் பெரும் நஷ்டம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அந்த பணத்தை திரும்ப பெற உங்கள் பணத்தை தவறான வழியில் முதலீடு செய்ய வாய்ப்பு உள்ளது.



**கன்னி**

இந்த வாரம் உங்கள் குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சி, அமைதி இருக்கும். உங்கள் முழு குடும்பத்துடன் ஒரு மத இடம் அல்லது உறவினரின் இடத்திற்குச் செல்ல திட்டமிடலாம்.



**மீனம்**

இந்த வாரம் உங்கள் முயற்சிகள் முழுமையாக ஆதரிக்கப்படும் மற்றும் அதன் உதவியுடன் உங்கள் தொழில் நல்ல ஊக்கத்தைப் பெற வாய்ப்புள்ளது.

# YOGASANAM

## சலம்ப புஜங்காசனம்

**பலன்கள்:-**

முதுகெலும்பை உறுதியாக்குகிறது.
நரம்பு மண்டலத்தைப் பலப்படுத்துகிறது.
தோள்களை உறுதியாக்குகிறது.
நுரையீரலின் செயல்பாட்டைச் செம்மையாக்குகிறது.
இடுப்புப் பகுதியை பலப்படுத்துகிறது.
சீரண உறுப்புகளின் செயல்பாடுகளை ஊக்குவிக்கிறது.
மன அழுத்தத்தைப் போக்க உதவுகிறது.



**செய்முறை:-**

விரிப்பில் குப்புறப் படுத்துக் கொள்ளவும்.
கைகளை மடித்து கை முட்டி மார்புக்கு அருகில் இருக்குமாறு வைத்து முன்னங்கைகளைத் தரையில் வைக்கவும்.
இருண்டு முன்னங்கைகளும் நேராக இருக்க வேண்டும்.
தலையையும் மார்பையும் உயர்த்தவும்.
இப்போது உங்கள் கை முட்டி, உங்கள் தோள்களுக்கு நேர் கீழே இருக்கும்.
முகத்தை நேராக வைக்கவும்.
20 வினாடிகள் இந்த நிலையில் இருந்த பின், ஆரம்ப நிலைக்கு வரவும்.

**குறிப்பு:-**

முதுகுத்தண்டில் தீவிர கோளாறு உள்ளவர்கள், தோள் மற்றும் கை முட்டிகளில் தீவிர வலி உள்ளவர்கள் இந்த ஆசனத்தைத் தவிர்க்கவும். கழுத்து வலி உள்ளவர்கள், முகவாய் மார்புக்கு அருகே வருமாறு கீழ் நோக்கி தலையைக் குனியவும்.

ஐக முட்டியைத் தரையில் ஊன்றும்போது வலி ஏற்பட்டால், விரிப்பு ஒன்றை மடித்து முட்டிகளுக்கு அடியில் வைக்கவும்.

# Amazing Facts in Science

**1. The Majority of Earth's Oxygen Is Produced by Oceans**

Have you ever thought of where oxygen comes from? Most of us believe that we get oxygen from trees but you might not know that more than half of the earth's oxygen that we breathe comes from oceans.

Various scientists estimate that 50%-80% of the earth's oxygen is produced by the oceans. The majority of this production is from plant-based marine organisms. Oceanic plankton, algae, seaweed, and some bacteria can photosynthesize & produce more than half of the world's oxygen.

**2. The Human Stomach Can Dissolve Razor Blades**

It may sound horrible, but it is another one of the most amazing facts in science that a human stomach is more capable of dissolving razor blades. Acids are classified on a scale from 0 to 14. Remember, the lower the ph level, the stronger the acid is. And the pH level in the stomach ranges from 1-3 which is so strong that it can dissolve a single-edge blade in a few hours of immersion in the stomach acid, as found in a study. So, if you ever swallow a razor blade, you don't need to panic.

**3. Bananas are Radioactive**

The journey of science facts also leads us to one of our favourite fruits, banana but not in a very delicious way!! Have you ever thought that bananas can be an example of a natural radiation source ever while eating them? Probably, you didn't. But it is true. They contain high levels of potassium, wherein a small amount is radioactive. But it doesn't require you to quit your yummy banana smoothie as the content of radiation is extremely small.

**4. Animals Use Earth's Magnetic Field to Know Their Location**

Yes, among amazing facts in science, sea animals have the ability to sense the magnetic fields of the earth for their orientation. According to the U.S. Geological Study, "There are pieces of evidence showing that some animals, like sea turtles and salmon, can sense the earth's magnetic fields and use it for navigation." But is the earth a magnet? Yes. The earth is composed of layers having different chemical compositions and physical properties. The crust of the earth has some magnetization while its core generates its own magnetic field.

**5. Helium Works Against Gravity**

Till today, did you know that helium doesn't get affected by gravity? If you cool helium just a few degrees lower than its boiling point ie. 452 degrees Fahrenheit (–269 degrees Celsius), it becomes superfluid, which means it can move without friction. It can rise up and over the sides of a glass. Not only this, but it can also drain through molecule-thin cracks in a container. Among other amazing facts in science, helium is the second-most abundant element in the universe.

**6. Humans May Harbour Genes from Other Species**

From now on, we can say that we aren't completely human, at least when it comes to the genetic composition inside our cells. It is another did you know facts that our genome may harbour as many as 145 genes that we inherit from bacteria, other single-celled organisms, and viruses, as per the studies published in the journal Genome Biology.

**7. There is No Flavour in Food Without Saliva**

Last but not least, one of the most amazing facts in science is that we need saliva to taste our food. In order for food to taste, the chemicals from the food must dissolve in saliva. Once the chemicals in the food are dissolved, they can be detected by receptors in our taste buds.

# Entertainment Corner

## ARUSUVAI SAMAYAL

## HOT CROSS BUNS

### INGREDIENTS

***For the yeast mixture***

2 teaspoon Active dry yeast
1/4 cup Water
a pinch of Sugar

***Main Ingredients***

500 grams All purpose flour – Maida
100 grams Whole wheat flour – Atta
50 grams Sugar
25 grams Butter
1 teaspoon Salt
2 teaspoon Cinnamon
160 ml Milk (2/3 cup)
160 ml water (2/3 cup)

***Other Ingredients***

50 grams Sultanas
50 grams Raisins
50 grams Currants

***For the Cross***

80 grams Flour
80 grams Water (1/3 cup)

***For the glaze***

3 tablespoon Apricot Jam
2 tablespoon Water

### INSTRUCTIONS

Dissolve the yeast in 1/4 cup of warm water and a pinch of sugar. Set aside for 5 minutes.

In the mean time, measure and add all the ingredients listed under main ingredients to a bowl. Add the yeast mixture. Knead the dough for 10 minutes. If using a stand mixer, knead for 5 minutes on medium speed. Don't add additional flour while kneading. The dough will be slightly sticky.

Just tuck the dough tight and place it on a lightly oiled bowl. Cover with a plastic wrap or a shower cap (cool idea) and leave to rise until at least doubled in size . About 1.5 to 2 hours.

Remove the dough onto a flat surface and mix in the dry fruits. Knead in until evenly incorporated.

Cover and leave to rise for one more hour.

After the rise, remove the dough and fold it twice or thrice gently to release the air bubbles.

Roll the dough into a log, divide the dough into 12 pieces and roll into round balls. Place them fairly close together on an oiled sheet pan. Cover the pan with a plastic sheet or a tea towel and let it rise for another hour or until doubled in size. Preheat the oven to 200°C

For the cross – Mix the flour and water to a paste. Fill up a piping bag with the paste. Make a cross on the buns and bake for 18-20 minutes, or until golden brown.

For the glaze – Mix the apricot jam and water and microwave for 15 seconds. Brush over the top of the buns when still warm. Cool the buns on a wire rack.

## SUDOKU ANSWER

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 7 | 4 | 8 | 2 | 6 | 5 | 9 |
| 8 | 5 | 9 | 6 | 7 | 1 | 3 | 2 | 4 |
| 6 | 2 | 4 | 5 | 9 | 3 | 7 | 8 | 1 |
| 2 | 9 | 6 | 1 | 5 | 4 | 8 | 3 | 7 |
| 3 | 4 | 8 | 2 | 6 | 7 | 1 | 9 | 5 |
| 7 | 1 | 5 | 9 | 3 | 8 | 4 | 6 | 2 |
| 9 | 6 | 3 | 7 | 4 | 5 | 2 | 1 | 8 |
| 4 | 8 | 1 | 3 | 2 | 9 | 5 | 7 | 6 |
| 5 | 7 | 2 | 8 | 1 | 6 | 9 | 4 | 3 |

## SUDOKU GAME

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | 4 | 2 | | | | | |
| 9 | 3 | | 8 | 4 | | | | |
| | 5 | 7 | | | | | | |
| 6 | | | 4 | | 1 | 7 | | |
| 4 | | | | 7 | | | | 2 |
| | | 5 | 6 | | 2 | | | 9 |
| | | | | | | 9 | 8 | |
| | | | | 2 | 8 | | 4 | 7 |
| | | | | | 3 | 2 | 1 | |

## விடுகதை விளையாட்டு

1. என்னை சுத்தமாக அழைக்கும்போது காணாமல் போயிடுவேன் -நான் யார் ?

2. நிலத்தில் முளைக்காத செடி நிமிர்ந்து நிற்காத செடி -அது என்ன ?

3. கை இல்லாமல் நீந்துவான் கால் இல்லாமல் ஓடுவான் -அவன் யார் ?

4. இளமையில் பச்சை முதுமையில் சிகப்பு குணத்தில் எரிப்பு -அது என்ன ?

5. கடிபடமாட்டான் பிடிபடமாடான் -அவன் யார்?

6. ஆடை இல்ல கறுப்பு அழகி ஆடிச் சுழன்று பாடுகிறாள் -அவள் யார் ?

7. மழையோடு வந்து மழையோட சென்று விடும் இதற்க்கு வாழ்வு ஒரு நாள் மட்டுமே ?

8. கருப்பர்கள் மாநாடு போட்ட இடத்தில கண்ணீர் பிரவாகம் -அது என்ன ?

9. கிட்ட இருக்கும் பட்டணம் எட்டித்தான் பார்க்க முடியல -அது என்ன ?


| | |
|---|---|
| Publisher | : R. Rajesh |
| Editor | : Saranya Rajesh |
| Designer | : D. Deepa |
| Journalist | : P. Praveen |
| Marketing Executive | : C. Karthikeyan |

இது எங்களுடைய ஒரே பத்திரிக்கை நிறுவனம்
This is our only concern

Express Velachery
Weekly - News Paper
37F, Diya Complex
Velachery Main Road, Vijayanagar,
Velachery, Chennai - 600042.
Timing: Monday to Friday 9.30 am to 6.00 pm
Saturday 9.30 am to 12.30 pm
044-42077328 / 7305837388
E-mail : expressvelachery@gmail.com



DISCLAIMER

Readers are advised to make appropriate enquiries while responding to advertisements in these columns. Express Velachery does not vouch for any claims made by the Advertisers. The Printers, Publishers, Editor and Owners of Express Velachery shall not be held responsible/ liable for any consequences, in case such claims are found to be false.


## சொல் விளையாட்டு

விந் ............
............யல்
?
வி ............
பா ............

ஓர் எழுத்து நான்கு சொற்களை கண்டுபிடியுங்கள்.

உங்களின் திறமைகளை வெளிப்படுத்த, உங்கள் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை உங்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெயில் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். இதற்கு கட்டணம் ஏதும் கிடையாது.

### சென்ற வார சொல் விளையாட்டு விடைகள்


| | | |
|---|---|---|
| 1.கவி | 2.வில் | 3.பல் |
| 4.கல் | 5.கடல் | 6.உடல் |
| 7.விரல் | 8.உரல் | 9.கல்வி |

### சென்ற வார விடுகதை விளையாட்டு விடைகள்

1.பணியாரம் 2.தோசை
3.அன்னம் 4.தோசை
5.சூர்பனகை 6.அறிமுகம்
7. சதுரத்திற்கு தான் நான்கு புறம் மூளை
8.சைக்கில் 9.கழுதை 10.அணில்

# CHUTTIES CORNER

## தனித்திறமை பகுதி






*Joshua Daniel*
Class 5
St. Theresa Bacq
Public School,
Bangalore.

## CROCHET



## படத்தில் உள்ள 12 வித்தியசங்களை கண்டுபிடியுங்கள்...!



## MEHENDI









Owned & Published R.Rajesh, No.17, 100ft, By Pass Road, Velachery, Ch-42. Printed by S.Ali Mohammed Sayeed, Mo.22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Ch-14. Editor: SARANYA RAJESH